# தேவதாயின் குரல்

'இறுதியில் எனது மாசற்ற இருதயம் வெற்றி கொள்ளும்'

FOR PRIVATE CIRCULATION ONLY

குரல் : 24 யாழ்ப்பாணம் நவம்பர் 1998




ஆசிரியருரை

## விழித்திருந்து செபிக்கும் மாதம்

நவம்பர் மாதம்; ஆண்டின் 11ம் மாதம் அது இருள் நிறைந்த 11ம் மணி நேரமுமாகும்.

விழித்திருந்து செபம் பண்ணுதலின் அவசியத்தை உணர்ந்தோர் மரித்தவர்கட்கும், மரிக்கப் போகிறவர்கட்கும் செபிக்கும் மாதம்.

எந்த ஊழியன் தன் எசமான் வருகைக்குக் காத்திருந்து அவர் வந்ததும் கதவைத் திறக்கிறானோ அவன் அவரை தன்னை வரவேற்புபசாரத்தில் மகிமைப்படுத்தும் எசமானாகவே கண்டு கொள்வான்.

இவ்வுலகில் வாழ்ந்து இறைபதம் அடையாதோரின் — உத்தரிப்போரின் செப மாதமும் இது அந்த உத்தரிப்பை இங்கேயே தொடங்கி விட்டவர்களின் மாதமுமாகும்.

யாழ் வாவி கொழும்புத்துறைதொட்டு பண்ணை மட்டுமுள்ள 3,000 மீனவக் குடும்பங்கள் பல, பட்டினிச் சாவையும் நாளாந்தம் காணாமற் போவோர் — மர்மமாக மரணிப்போரையும் நினைந்து செபிக்கும் காலம் இது.

கொடூர கொலையுண்ட இருபாலை கானான் சபைப் போதகர் சங். சசோதரர் வாசுவையும் கர்த்தருக்குள் வைக்கிறோம்.

பின்பு விண்ணகத்திலிருந்து ஒரு குரலைக் கேட்டேன். 'இது முதல் ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பெறுபேற்றோர் என எழுது' என்று அது ஒலித்தது. அதற்குத் தூய ஆவியார் 'ஆம் அவர்கள் தங்கள் உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவார்கள். ஏனெனில் அவர்களின் செயல்கள் அவர்களைப் பின் தொடரும்'' என்று கூறினார்.

(திருவெளிப்பாடு 14:13)

வடமேற்கு கரை சிங்கள மீனவர்களையும், இரணைவில்லை, நாரைச்சோலை கிராமவாசிகள் அதிகாரபீடத்தினால் இம்சிக்கப்படும் துன்பங்களையும் செபத்தில் வைக்கிறோம்.

அவர்களின் சிலுவைப் பாதைகள், செபதபங்கள், அவர்களனுபவிக்கும் துன்ப துயரங்களுடன் வன்னி மக்கள், குடாநாட்டு மக்களின் செபங்கள் சிலுவைப்பாடுகளுடன் ஒன்று சேர்ந்து இறை சந்நிதானத்தை நோக்கி எழுவதாக.

சிலுவை நிழலில் நில்லாதோரை — நிற்க விரும்பாதோரை நாம் இங்கு குறிப்பிடவில்லை.

ஆசிய ஆயர்களின் அறைகூவலையும் படிப்போம், சிந்திப்போம். இது 5 தலைப்புகளில் 3ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

## இரணவில்லை சிலுவைப்பாதை

### நேற்று இரணவில்லை, இன்று நாரைச்சோலை, நாளை ...?

அமெரிக்கா தன் (V.O.A) 'அமெரிக்க குரல்' வானொலி நிலையத்தை பெரும்பான்மையான சிங்கள கத்தோலிக்க மீனவர் கிராமத்தில் ஆரம்பிக்கத் திட்டமிட்டது. அங்கிருந்து கிழக்கே கொரியக் கடல் மட்டும், மேற்கே கிழக்கு ஆபிரிக்க கரைவரை தன் பிரசார வானொலி அலைகளைப் பரப்பவும், ஆழ்கடலினுள் செல்லும் தனது நீர்மூழ்கிகட்கு, கப்பல்கட்கு ராணுவ செய்திகளை அனுப்பவும் ராடர் கருவிகள் மூலம் கட்டளைகள் விடுக்கவும், ஆசிய சந்தையில் ஆதிக்கம் பெற்றுத் தன் பொருளாதாரத்தை நன்கு விஸ்தரித்து ஸ்திரப்படுத்தவும் இட்ட இரகசிய திட்டமே இது.

கொழும்பில் 1992ல் நடந்த குண்டு வெடிப்பின் பின்னணியில், 1000 ஏக்கர் நிலத்தை அரசிடம் இருந்து வாங்கி 4 பெரிய மின் உற்பத்தி நிலையங்களை (ஒவ்வொன்றும் 500 கிலோவாட்ஸ் மின் சக்தி தரக்கூடியவை) பொருத்த முபற்சித்தது.

இந்த இராட்சத கோலியாத்துகட்கு எதிராக சிறிய தாவீதுகள் போன்ற ஏழைக் கத்தோலிக்க மீனவர்கள் ஆர்தர் பெர்னான்டோ என்ற ஒரு சாதாரண குடும்பஸ்தர் தலைமையில் 1000 ஏக்கருக்கு வெளியே, தென்னை மரங்களில் மரச்சிலுவைகளை அமைத்து நாளாந்தம் திருச்சிலுவைப்பாதை செய்யத் தொடங்கினர்.

பொலிசார் சென்று அவர்களைக் கலைத்தனர் ராணுவம் வந்து கண்ணீர் புகை அடித்து விரட்டியது, துப்பாக்கியால் சுட்டு 4 பிள்ளைகளின் தந்தை ஒருவரையும் கொன்றனர்.

இப் போராட்டத்தைக் கைவிடாவிட்டால் 1,20,000 பெண்கள் தமது உடை தயாரிப்பு தொழிற்சாலையிலிருந்து நீக்கப்படுவர் என அமெரிக்க அரசு அதட்டியது. மக்கள் மழை வெயில் பாராது தொடர்ந்து சிலுவைப்பாதையை நடத்தினர்.

ஒரு நாள் சிலுவைப்பாதை நடந்து கொண்டிக்கையில், அவ்வழியே அமெரிக்க காரியாலய உயரதிகாரி திருமதி ஸ்சாப்டர் தன் குளிரூட்டப்பட்ட மோட்டாரில் சென்று கொண்டிருந்தாள். மழையிலும்

(5ம் பக்கம் பார்க்க)

# தேவதாயின் அற்புத வரலாறு [தொடர்ச்சி]

யேசுநாதர் பிரசங்கித்ததும் அதற்கு தேவமாதா உதவி செய்ததும் வருமாறு:-

இறுதியாக யேசுநாதர் தாமே உலக இரட்சகரென்று பிரசித்தமாக அறிவிக்கத் தொடங்கினார். அர்ச் பெலவேந்திரரும் சுவிசேஷக அருளப்பரும் அவரைப் பின்தொடர்ந்தார்கள். இவர்கள் இருவரும் முன்பு ஸ்நாபக அருளப்பருடைய சிஷராயிருந்தார்கள். பின்பு அர்ச் இராயப்பரும், அர்ச். பிலிப்புவும் இவருக்கு சீஷர்களானார்கள். இந்தப் பிலிப்புதான் உலக இரட்சகர் வந்துவிட்டாரென்று நந்தானியேலுக்குச் சொல்லி அவரை யேசுநாதரிடத்தில் கூட்டிக்கொண்டு போய்விட்டார். இவரும் அவருக்கு சிஷரானார், இந்த ஐந்து பெயரோடு பிரசித்தமாய் பிரசங்கம் பண்ணவும் ஞானஸ்நானம் கொடுக்கவும் ஆண்டவர் கலிலேயா தேசத்திற்குப் போனார். அர்ச் கன்னிமரியாள் தமது திருக்குமாரனோடு கூட இரட்சணியத்தின் வேலைக்காகப் போகிறது தேவசித்தமென்றறிந்தாள், அக் கட்டளையைத் தேவமாதா தாழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு தமது திருக்குமாரனுக்குப் பதிலாக தாம் மரணமடைய வேண்டுமென்றும் அப்படி இல்லாவிட்டால் அவருடனேயே மரணமடைய வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டாள்.

சீஷர்கள் தேவன் மாம்ச ஐக்கியமான பரம இரகசியத்தை அறிந்துகொண்டு ஆண்டவருடைய தாயாரைப் பார்க்க வேண்டுமென்று விரும்பி அவரிடத்தில் உத்தரவு கேட்டு சென்றார்கள். தேவமாதா இதை அறிந்து தமது சிறு வீட்டைச் சுத்தம் செய்து அவர்களுக்கு சாப்பாடும் தயார் செய்தாள். மனிதனாகிய தேவனுக்கு எப்படி வணக்கம் செலுத்த வேண்டுமென்பதை சீஷர்கள் கற்றுக்கொள்ளும்பொருட்டு இவள் வாசற்படியில் வந்து தெண்டனிட்டு விழுந்து தமது திருக்குமாரனுடைய பாதங்களை முத்தி செய்து மகா தாழ்ச்சியோடு அவருடைய ஆசீர்வாதத்தைக் கேட்டாள் யேசுநாதருக்கு இவள் உணவு பரிமாறும்போது முழங்காலிலிருந்து செய்வது வழக்கம். ஆனால் அன்று ஆண்டவர் சிஷர்களோடு உணவருந்தியபடியால் நின்றுகொண்டே பரிமாறினாள். அவர்கள் நித்திரை செய்யப் போனபோது ஆண்டவர் தமது தாயோடு செபக்கூட்டத்திற்குச் சென்றார். செபக்கூட்டத்திலே தேவமாதா அவருடைய பாதம் பணிந்து அவருக்கு உணவு பரிமாறும்போது முழங்காலில் இருக்காததற்காக மன்னிப்புக் கேட்டாள். தமது தாயார் பேறுபெறும் பொருட்டு தெய்வ மகத்துவத்தோடும் பெருந்தன்மையோடும் அவளை நடத்தி வந்தாலும் ஆண்டவர் நித்திய சீவியத்தின் வார்த்தைகளால் ஆறுதல் படுத்தி எழுந்திருக்கச் செய்தார்.

அப்பொழுது அவர் ஏற்படுத்திய ஞானஸ்நானமாகிய தேவதிரவிய அனுமானத்தைத் தனக்குக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டாள். தம்மைப் பின் செல்கிறவர்களோடு இவளும் ஒன்றுபடத் தக்கதாக இவரும் ஞானஸ்நானம் கொடுக்கச் சம்மதித்து பரமண்டலத்திலிருந்து அனேக சம்மனசுக்கள் அவளுக்குத் தரிசனையாகும்படி செய்தார். யேசுநாதர் தமது தாயாருக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்போது ''இவள் எமக்கு அன்பான மகள் இவள்பேரில் நாம் சந்தோஷமாயிருக்கிறோம்'' என்ற பிதாவின் சத்தம் கேட்டது. தொடர்ந்து ''இவள் நாம் தெரிந்து கொண்ட அன்பான தாயார் இவள் நமது வேலைகளில் மிகவும் உதவியாக இருப்பாள்'' என்ற சுதனுடைய சத்தமும் கேட்டது. இவற்றுடன் ''இவள் ஆயிரம் பேர்களுக்குள்ளே தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தமானவள்.'' என்ற இஸ்பிரீத்து சாந்துவின் சத்தமும் கேட்டது. அவள் ஞானஸ்நானம் பெற்றபின் அர்ச். அன்னம்மாளுக்கு உறவுமுறையானவர்கள் கானாவில் செய்த ஓர் திருமணத்திற்கு தேவமாதாவை வரும்படி கேட்டுக் கொண்டார்கள். பரிசுத்த கன்னிகை அவ்விடத்திற்குப் போய் தமது திருக்குமாரன் சிஷர்களோடு வருகிறதை அறிவித்தார் இவர்களும் அவரை அத் திருமணத்திற்கு வரும்படி கேட்டிருந்தார்கள். யேசுநாதர் அவர்கள் வீட்டில் நுழையும்போது ''ஆண்டவருடைய சமாதானம் உங்களோடிருப்பதாக'' என்றார். திருமணத்தின்போது மணவாளன் தன்னை அர்ச்சித்துக்கொள்ளும் செபங்களை அவருக்குச் சொன்னார். அதே போல் தேவமாதா பெண்ணுக்குச் சொன்னாள். அவர்களும் மிகவும் மரியாதையுடன் நடந்து கொண்டிருந்தார்கள். திருமணத்திற்காக தயாரிக்கப்பட்ட மென்மையான உணவுப் பொருட்களை சுவை பார்ப்பதற்காக கொடுத்தார்கள். அப்படியான உணவு வகைகளை இவர்கள் தங்கள் வீட்டில் ஒருக்காலும் சாப்பிட்டதேயில்லை. அப் பந்திக்குத் தலைமையாய் இருந்தவர் ஒரு குருவானவர். அவர் தண்ணீர் புதுமையாக இரசமாய் மாற்றப்பட்டதை அப்போது அறியாமலிருந்தார். யேசுநாதரும் அவர் தாயாரும் பந்தியில் கடைசியிலிருந்ததை அறிந்து மிகவும் ஆச்சரியப்பட்டார். அர்ச். அருளப்பர் இந்தப் புதுமை பிரபல்யமாக நடந்தபடியால் இதை முதற் புதுமை என்றார். இதற்கு முன் யேசுநாதர் அநேக புதுமைகளை இரகசியமாகச் செய்திருக்கிறார்.

கானாவூரிலிருந்து தேவமாதாவும் யேசுநாதரும் சீஷர்களோடு கப்பர்னாவூருக்கு வந்தார்கள். அங்கே பல இடங்களில் பிரசங்கம் செய்தார்கள். பல பக்தியுள்ள பெண்கள் தேவமாதாவுடன் சேர்ந்துகொண்டார்கள். தேவமாதா தான் யேசுநாதரிடத்தில் கற்றுக்கொண்டவைகளை அப்பெண்களுக்கு சொல்லிக்கொண்டு வந்தாள். தமது திருக்குமாரனின் வல்லமையைக்கொண்டு பல புதுமைகளைச் செய்தாள். அவள் வேத உபதேசம் செய்வதற்காக செய்த யாத்திரைகளில் மிகவும் வருத்தப்பட்டபடியால் சில வேளைகளில் ஒரு காலடி கூட எடுத்துவைக்க முடியாமலிருப்பாள். அப்போது ஆண்டவரின் வல்லமையால் மீண்டும் யாத்திரையைத் தொடருவாள். புதிய ஏற்பாட்டின் செய்திகளை இரட்சகரிடமிருந்து அவள் நன்றாக அறிந்திருந்தாலும் யேசுநாதர் பிரசங்கம் செய்யும்போது அவருக்கும் அவர் போதிப்பவைகளுக்குமாக முழங்காலிலிருந்துகொண்டு மிகவும் பக்தி வணக்கத்துடன் பிரசங்கம் கேட்பாள். பிரசங்கம் கேட்பவர்களுடைய மனங்களை அவள் அறிந்தபடியால் அவர் வார்த்தையைக் கேட்டு உணராதவர்களுக்காக வருந்துவாள். உணர்ந்தவர்களுக்காக சந்தோஷப்படுவாள். யேசுநாதர் பிரசங்கம் செய்யும்போது பரம பிதாவை வேண்டிக்கொள்வார். அப்போது தேவமாதாவும் வேண்டிக்கொள்வாள். இவள் யேசுநாதருடைய தாயாரென்று எல்லோரும் அறிந்தபடியால் சனங்கள் மிகவும் மரியாதை செய்தார்கள்.

சனங்கள் தேவமாதாவிற்கு மரியாதை செய்கின்றபோது அவள் மிகுந்த தாழ்ச்சியுடனிருப்பாள். ஒருநாள் ஓர் ஊமையனிடத்தில் இருந்த பசாசை யேசுநாதர் துரத்தியபோது ஒரு பெண் ''உம்மைச் சுமந்த உதரம் பாக்கியம் பெற்றது'' என்றார். இந்தப் புகழ்ச்சியைத் தன்னைவிட்டு நீக்கத் தேவமாதா மன்றாடினதினாலே இவள் மன்றாட்டைக் கேட்டு சர்வேஸ்வரனுடைய வாக்கியத்தைக் கேட்டு அதன்படி நடப்பவர்

(4ம் பக்கம் பார்க்க)

# ஆசிய ஆயர் அவையில் வெளிக்கொணரப்பட்ட சில முக்கிய கருத்துக்கள்

3ம் மிலேனியத்துக்கு ஆயத்தமாக ஆசியாவின் ஆயர்களையும் சபைகளையும் ஒன்று கூட்டுமாறு அழைத்த 2ம் அருள் சின்னப் பாப்பிறை, அவர்களை 1998 ஏப்ரல் 19 -மே 19 வரை வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் சந்தித்தார். தமிழ் உட்பட பத்து ஆசிய மொழிகளில் (சீன, வியட்நாமிய, பிலிப்பினீய, அராபிய, கொரிய, மலையாள ...) திருவழிபாடு நடைபெற்றது. சீன உபகண்டத்திலிருந்து ஆயர் மத்தாயஸ் டுவான்சிங்மிங்கும், யோசவ் சுசிசுவானும் பங்கு பற்ற அழைக்கப்பட்டிருந்தும் அரசு மறுத்து விட்டது.

முக்கிய கருத்துகள் வருமாறு:-

1, பல்மதச்சூழலில் நற்செய்தி அறிவிப்பு

1. யப்பான் ஆயர் அகுஸ்தீன்:- பிற மதத்தினருடன் கலந்துரையாடலில் கிறீஸ்துவின் தெய்வீக தனித்துவத்தை குறைத்துவிடக்கூடாது. கிறிஸ்துவின் ஒப்பற்ற இறைமறை பொருளை, அறை கூவும் அதேவேளையில் அகந்தைபெருமித போக்கும் அதிகார மொழியியல் தொனியும் தவிர்க்கப்படல் வேண்டும்.

2. ஆசியாவின் பண்டைய பல்மதச் சூழலில் விசுவாசக் கொள்கைத்திரட்டை விட (மத்திய நவீன இறையியலைவிட) வார்த்தைகள் ஒய்ந்த சுவிசேஷ வாழ்க்கைச் சாட்சியமே சிறந்தது.

3. பேராயர் அகுஸ்தீன் யுன் இக்சி நொமுரா:- ஆசியாவிலும் யப்பானிலும் கிறீஸ்துவை அறிவிக்கும் சிறந்த வழி— மனித உறவில் செவிகளைவிட கண்கள் முக்கியமானவை. மனமாற்றத்துக்கு வார்த்தையை விட ஆழ்ந்த பார்வை அதி பயன் தரும். அவசிய தாக்கத்தை ஏற்படுத்தும் அழகிய கவர்ச்சி மிக்க வார்த்தைகளால் போர்த்தப்பட்ட நற்செய்தியை விட நம் சொந்த வாழ்வில் உயிர்ப்போர்வை பெற்ற நற்செய்தி அதிக நம்பத் தகமையும் கவர்ச்சியும் கொண்டது.

2. பண்பாட்டு மயமாக்கல்

ஆசியாவின் சனத்தொகையில் கத்தோலிக்கர் 2.9 வீதமே. அந்நியமதமாக — அந்நியரால் கொண்டு வரப்பட்டும் ஆசியாவின் அந்தராத்மாவுக்கே இன்று அந்நியமாக்கப்பட்ட நிலையிலா உள்ளது?

அது தனக்கே உரித்தான மொழியியலில் தன் உயிர் விசுவாச வாழ்விற்கு இறையியல் வடிவம் அமைத்து தன் பல்மயப்பண்பாட்டின் வர்ணங்களால், தன்னை கிறிஸ்துவின் மணவாட்டியென அலங்கரித்து தன்முன்னையதான மிசனரித் தலைவர்களான புனித பிரான்சீஸ் சவேரியார், மதுரை தத்துவபோதகர், சீனாவின் றிச்சி அடிகள் பாதையில் செல்ல, தேவையற்ற தடைகளை உயர் நிர்வாகம் அகற்ற வழிதேடுதல். வேண்டும் ஆசிய சபைகளில் பல மேற்கத்திய கருத்துவாத நிழலிலேயே இன்னும் சஞ்சரிக்கின்றனவா?

கிறீஸ்துவில் வளர:-

ஆசிய சபைகள் தம்முழுப்பொறுப்பையும் ஏற்று முன் செல்ல, வேறு ஆசிய சபைகளின் ஆதரவு, ஊக்குவிப்பு, அதிகரா நிர்வாகிகளின் அன்பு, ஆறுதல் நிறை, வழி நடத்துதல் .. புதிய நம்பிக்கை, புதிய துணிவு, ஏற்புடமை, உரையாடல் இவற்றுடன் இணைந்த — இயேசுவின் நிறைவுக்குள் இட்டுச்செல்லும் ஓர் புனித யாத்திரையாக மாற்றுவோம்.

3. ஏழைகளுடன் தோழமை

கடந்த ஐந்து தசாப்தங்களில் ஆசியாவின் சில நாடுகள் அபார பொருளாதார வளர்ச்சி கண்டிருப்பினும் அண்மையில் அவற்றின் பண தளங்களும் அவற்றைத் தொடர்ந்து பொருளாதார வளர்ச்சியும் சீர்குலையத் தொடங்கியுள்ளன. (யப்பான், கொரியா, இந்தோனீசியா, மலேசியா, சிங்கப்பூர் முதலியன) இதனால் பெரிதும் பாதிப்புறுபவர் பெருந்தொகையான ஏழைகளும் வறியவர்களுமே.

கீழைத்தேய பாரம்பரிய தியானயோக ஆன்மீகத்தை சமப்படுத்த சமூக நீதி நிறை ஆன்மீகத்தை திருச்சபை கொடுக்கலாம். ஆசியாவின் ஒடுக்கப்பட்ட, தள்ளப்பட்டு சமூகவிளிம்பில் உள்ள ஆதிவாசிகள், தாழ்ந்த சமூகத்தினர், பெண்கள், குழந்தைகள், இடம் பெயர்ந்தோர் எயிட்ஸ் நோயாளிகள் — இவர்களுக்காக இர்க்கதரிசனக்குரல் கொடுக்க ஆசியத் திருச்சபைகள் முன்வர வேண்டும் என அறைகூவினார் கேரளத்தின் சங்கனாச்சாரி பேராயர் யோசவ் பெவத்தில்.

எம் ஆண்டவர் யேசுவின் பகிரங்கப் பணி — ஸ்நாபகர் யோவானின் தீர்க்கதரிசனப்பணியோடு ஆரம்பமானது போன்று, ஆசிய திருச்சபையின் தீர்க்கதரிசனப் பணி முழு விடுதலையைநோக்கி கடமைப்படுத்தப்பட வேண்டும். சூறையாடப்பட்டு பாதுகாப்புகளை இழந்து வருகின்ற ஏழைகள் வாழும் ஆசியா என்ற வரட்சி மிகு வனாந்திரத்தில் வசிக்கும் ஒடுக்கப்பட்டோரின் குரலாக திருச்சபை எழவேண்டும் என்றார் பேராயர் பெவத்தில்.

4. வேத கலாபனையும் புறம்பாக்கப்படுதலும்.

ஆசிய ஆயர் அவை முடிவுறும் வேளையில் பாக்கிஸ்தான் பெய்சலாபாட் ஆயர் யோண் யோசவ் அவர்களின் மரணச் செய்திஎட்டியது. பாக்கிஸ்தான் கிறிஸ்தவர்கட்கு எதிராக அந்நாட்டின் தேவநிந்தைச் சட்டம் பலநோக்கங்களுடன் பாவிக்கப்படுகிறது. கிறீஸ்தவர்களின் நிலங்களை அபகரிக்க, பணம்பறிக்க முஸ்லிம்கள் இச்சட்டத்தைப் பாவிக்கிறார்கள், முஸ்லிம் நாடுகளிலும், கம்மியூனிஸ்த நாடுகளிலும் கிறீஸ்தவர்கள் அநீதியாகத் தண்டனை பெற்று, மனச்சாட்சியின் சிறைக்கைதிகளாக, சித்திரவதைக்குள்ளாகி, விசாரணையின்றி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டோ, காணாமற்போயோ விடுகின்றனர்.

சீனா, வியட்நாம், வடகொரியா முதலாய நாடுகளில் நீண்டகாலமாக கிறீஸ்தவர்கள் துன்புறுகின்றனர். தம் கிறிஸ்தவ விசுவாசத்திற்காக சிறைவாசமும், பலதடவைகள் மரணதண்டனையும் பெறுகின்றனர். இருந்தும் சீனாவிலும் வியட்நாமிலும் தேவ அழைத்தல்கள் பெருகியுள்ளன.

மத்திய கிழக்கு நாடுகளின் திருச்சபை ஆயர்கள், பெரும்பான்மை முஸ்லீம்கள் வாழும் தம் நாடுகளில், அவர்களோடு கூடிவாழ்ந்தாலும் அவர்கள் காட்டும் பலாத்காரப் போக்கினை எடுத்துக் காட்டினர். கல்தேய திருச்சபையின் ஆயர் அன்ருவாஅவ்டோ பேசுகையில் "இந்தச் சூழலில் வாழும் கிறிஸ்தவ சபைகள் நம்பிக்கையின் சாட்சிகளாக, யதார்த்த பார்வையும் வருங்காலத்தை நோக்கி இதுவே எம் விதி என்று சோர்ந்து விடாது அல்லது இறுதிக்காலம் வந்து விட்டது என அவசர நிலைக்குள் அகப்பட்டுவிடாமல், நம்பிக்கையோடு திரும்பத் திரும்ப ஆரம்பிக்க அழைக்கப்படுகின்றனர். ஏனைய மனிதருக்காக கொடுக்கப்பட்ட ஓர் இருதயத்தோடு, பயங்களை நீக்கி விட்டு, சிறிய அல்லது

(4 ஆம் பக்கம் பார்க்க)

# முத்திப்பேறு பெற்ற சிப்பிரியான் மிக்கேல் இவேனேரன்சி

1998 மார்ச் 12ல், 2ம் அருள் சின்னப்ப பாப்பிறை அமரர் மிக்கேல் ரன்சி என்ற குருவுக்கு முக்திப்பேறு பெற்ற பட்டம் வழங்க நைஜீரியாவுக்குச் சென்றார்.

தென் நைஜீரியாவிலுள்ள இக்பேசிஷோ கிராமத்தில் 1903ல் பிறந்த மிக்கேல் ரன்சிக்கு 'இவேனே' என்ற பெயர் சூட்டப்பட்டது. 'இவேனே' எனில் மனித தீமை என்னை அழிக்காதிருக்கட்டும் என்பது அர்த்தம். அவர் பிறந்த மாதத்தில் தந்தையார் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் சிறையிலிடப்பட்டார்.

சிறுவனாயிருந்த போது இவரோடு விளையாடிய பையன் ஒருவன் எறிந்த கல்லால் ஒரு கண் குருடாயிற்று. ஆறு வயதில் அவரது மாமியார் வாழ்ந்த ஒரு கிறிஸ்தவ கிராமத்திலிருந்த புனித சூசையப்பர் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார். 1912 ஜனவரி 7ம் நாளில் ஞானதீட்சை பெற்று மிக்கேல் என்ற நாமம் சூட்டப்பட்டார்.

1919ல் தன் கல்வியை முடித்து 1924 வரை கடமை உணர்ச்சியுடன் ஆசிரியராகப் பணியாற்றினார்.

1910ல் அவர் தந்தையார் மலேரியாக் காய்ச்சலினால் மரித்தார். அவர் தாயார் 1922ல் இறந்தார். ஆபிரிக்காவின் பண்டைய மதத்தின் மூடக்கொள்கையின்படி பல இளைஞர்களின் மரணத்திற்கு அவளே காரணமென ஆபிரிக்க சூனியக்காரிகளால் பொய்க்குற்றம் சாட்டப்பட்டு நஞ்சூட்டிக் கொல்லப்பட்டாள்.

1924ல் (தமது 21வது வயதில்) புனித சூசையப்பர் கல்லூரி அதிபரானார். பிள்ளைகள் கல்லூரியை தங்கள் சொந்த வீடு போல் மதித்து மகிழ்ச்சியுடன் கற்க வழி வகுத்தார். மாலை வேளைகளில் ஆசிரியர்களிடம் பாடங்களின் சந்தேகங்களைத் தெளிந்து பாடாயத்தம் செய்தலை ஊக்குவித்தார்.

பின் அவர்களை நற்கருணை நாதருக்கு முன் அழைத்துச் சென்று தியானத்திலும் செபத்திலும் ஈடுபடச் செய்வார்.

1925ல் குருமடத்தில் புகுந்தார். 1937 டிசம்பர் 19ல் நைஜீரியாவின் முதல் சுதேச குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். ஆன்ம வாஞ்சைமிக்க குருவாக பணியாற்றினார். மக்களோடு ஒன்றாக வாழ்ந்து உண்ண, உறங்க நேரமில்லாமலே சேவை செய்தார். தன் வருவாயிலிருந்தே ஏழைகட்கு பகிர்ந்தளித்தார். கோவிலுக்கு வந்தடைந்த ஏழை வியாதிஸ்தர்களைப் பராமரித்தார்.

1939ல் டுனுகோவியா என்ற புறம்போக்கான நாட்டுப்புறப் பங்கு ஒன்று அவருக்கு கொடுக்கப்பட்டது. 50க்கு மதிகமான குடிசைக் கோவில்களை சிறிய சைக்கிளிலும், பின் பழைய ஒரு மோட்டார் சைக்கிளிலும் தரிசித்து 14 பங்குகளை உருவாக்கினார். நல்லூர் மீசாமைப் போன்று கல்விக்கூடங்களையும் ஒவ்வொரு கோவிலுக்கு அருகேயும் நிறுவி சில இடங்களில் மாணவர் தங்க விடுதிகளையும் அமைத்தார். கத்தோலிக்க குடும்பங்களை உருவாக்க, பெண்கள் நிலையை உயர்த்த அரும்பாடுபட்டார்.

இச் செயல்கள் மத்தியிலும் செப தப வாழ்வை தணிய விடவில்லை. தமது முன் மாதிரிகையால் பலரை குருத்துவ அழைத்தலுக்குள் நுழையச் செய்தார். இவர்களுள் கருதினால் பிரான்சிஸ் அறின்சே உட்பட ஒரு பேராயரும் இரு ஆயர்களும் அடங்குவர்.

1915ல் அக்பு அயாலி என்ற பகுதியில் பணியாற்ற அனுப்பப்பட்டார். அங்கு 4 வருட சேவையில் அவரது ஆன்மீகம், தபசியம் வளர்ந்து பிரகாசித்தது.

1949ல் குருக்கள் ஞானவொடுக்கத்தில் ஆயர், ''நம் மத்தியில் பரவச தியானயோக சீவியம் ஊக்குவிக்கப்படல் வேண்டும்'' என்று அழைப்பு விடுத்தார். அதன்படியே மைக்கல் ரான்சி அடிகள் இங்கிலாந்தில் உள்ள புனித பேர்ணாட் ராற்பிஸ்ற் துறவற சபையில் சேர்ந்தார். அங்கு 10 வருட காலமாக மறைந்த வாழ்வைப் பின்பற்றி செபம், இறைவாக்கு, தியானம், உடல் உழைப்பு என்பவற்றால் யேசுபிரானின் மறைந்த சீவியத்தின் ஓர் அங்கமானார். அவரை ஆன்மீக வழி காட்டியாக ஏற்று பல ஆயர்கள், குருக்கள், ஆபிரிக்க மாணவர்கள் கடிதங்கள் மூலமாகவும் நேரடியாகவும் தொடர்புகொண்டு ஆன்மீக ஆறுதலை அடைந்தனர்.

1963ல் புனித பேர்ணாட் துறவற மடத்தினர் ஆபிரிக்காவில் கமரூன் நாட்டில் தம் மடம் ஒன்றைத் திறக்க தீர்மானித்து ரன்சி அடிகளாரையே அனுப்ப முடிவு செய்தனர். ஆயின் 1964 ஜனவரி 20ல் அவர் சுகவீனமுற்று தனது 61வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

1986ல் அவரது திருவுடல் அடங்கிய பேழை நைஜீரியாவுக்கு கொண்டு வரப்பட்டு 'ஒனிற்சா' மறைமாவட்ட பேராலயத்தில் வைக்கப்பட்டபோது பேழையை நம்பிக்கையுடன் முத்தி செய்த, மிக முற்றிய நிலையில் புற்றுநோயால் வருந்திய இளம் பெண் பூரண குணமடைந்தாள்.

கொங்கோ நாட்டு ஆயர் பஸ்தியா அளித்த புகழாரம் இது:-

''முழு உலகுக்கும் சொந்தமான கத்தோலிக்க திருச்சபை இக் கண்டத்தின் புதல்வர்கள், புதல்விகள், ஆண்கள், பெண்கள் அனைவரும் கிறிஸ்துவானவரால் ஆட்கொள்ளப்பட்டு, தம் வாழ்க்கைச் சுவடுகளினால் நற்செய்தியின் பக்கம் ஒன்றை எழுதும் அளவிற்கு தம்மைக் கையளித்துள்ளார் என எடுத்துக்காட்டத் தொடங்கியுள்ளது.

---

## தேவதாயின்

(2ம் பக்க தொடர்)

கள் பாக்கியவான்கள் என்று ஆண்டவர் திருவுளம் பற்றினார். இன்னொரு முறை சனக்கூட்டங்கள் திரளாக பிரசங்கத்தைக் கேட்க வந்தபோது இதோ உமது தாயாரும் உமது உறவின் முறையாருமென்றார்கள் அப்போது தேவமாதா இந்தப் புகழ்ச்சியைத் தன்னை விட்டு நீக்க உள்ளத்தில் வேண்டிக்கொண்டபடியினாலே இவள் மன்றாட்டைக் கேட்டு யேசுநாதர் நமது வார்த்தையைக் கேட்டு அதன்படி நடக்கிறவர்களே நமக்கு தாயும் சகோதரர்களும் என்றார். யேசுநாதரால் அனேகர் மனந்திரும்புகிறதை பசாசு கண்டு இவர்தான் உலக இரட்சகராக இருக்கக் கூடுமென்று நினைத்தது. (வளரும்)

---

## ஆசிய

(3ம் பக்க தொடர்)

பெரிய தீர்மானங்களிலும் நம்பிக்கை நிறை விசுவாசத்தில் செயற்பட அழைக்கப்படுகிறோம்'' என்றார்.

5. பொது நிலையினர்

ஆசிய திருச்சபை மிகைப்படுத்தப்பட்ட குரு மைய அமைப்பாகிவிட்டதால் பொது நிலையினரை வெறும் உதவியாளராக மாத்திரமல்ல, சம ஊழியக்காரராகவும் கருதுதல் வேண்டும். 2ம் வத்திக்கான் சங்கமும், விவிலியமும் காட்டும் பொது நிலையினர் பற்றிய உண்மைகளை அறிந்து செயல்படவேண்டும். வரலாற்றுக் கால நேரங்கள் சூழல்கள் எங்களை கட்டாயப்படுத்துமட்டும் காத்திராமல் ''அவர்களே திருச்சபையின் அதன் சத்தியங்களின் காப்பாளர்கள், அதை அறைகூவி, கற்பித்து, நிர்மாணித்து புனிதப்படுத்துவர்'' என உணர்வோமாக, என்றார் கோதாமங்கலம் ஆயர் ஜோர்ஜ் புன்னக்கோட்டில்.

# புனித மாட்டீன் தே போரஸ் (1579 — 1639)

தென்னமெரிக்காவைச் சேர்ந்த பெரு நாட்டில் லீமா நகரில் 1579 டிசம்பர் 9ல் மாட்டீன் தே போரஸ் பிறந்தார். இவரது தந்தை ஸ்பெயின் நாட்டவர். அல்காந்திராவின் இராணுவ வீரர். தாய் நீக்ரோ சாதியினள். மாட்டீன் நிறத்திலும் உருவத்திலும் தாயை ஒத்திருந்ததால் தந்தையின் வெறுப்புக்காளானார். சிறிது காலத்தின்பின் தந்தையார் தம் குடும்பத்தைக் கைவிட்டுச் செல்ல தாயார் அன்னாளே கஷ்டப்பட்டுழைத்து மாட்டீனையும் தங்கையையும் பராமரித்தாள்

தாழ்மையிலும் எளிமையிலும் தம் வாழ்வைத் தொடங்கிய மாட்டீன் தம் நற்குண நற்செய்கைகளாலும் தவக்கிரியைகளாலும் புனித நிலையின் கொடுமுடிவரை சென்றார்.

பன்னிரு வயதில் ஒரு வைத்தியரிடம் மருத்துவத் தொழில் பழகித் தேர்ச்சி பெற்று மூன்றாண்டுகள் மருத்துவராக வேலையாற்றினார். ஏழைகட்கு இலவசமாக சிகிச்சை அளித்தார்.

பதினைந்தாவது வயதில் புனித சாமிநாதர் சபையில் துணைச் சகோதரராகச் சேர்ந்தார். ஒன்பது ஆண்டுகளாக துறவற சபையின் கடுமையான விதிகளைப் பிரமாணிக்கமாக கைக்கொண்டு, தேவ உதவியினால் தனது உடல், உள இச்சைகளுடன் போராடி வெற்றி கண்டு நிரந்தர சகோதரராக அங்கீகரிக்கப் பட்டார். தன்னைக் கண்டிப்பாக அடக்கி ஆள்வதிலும், செபதப பரித்தியாக பக்தி முயற்சிகளிலும் உலக மாய்கைகளை அறவே துறப்பதிலும் தலைசிறந்து விளங்கினார்.

தேவசிநேக அக்கினி, இவர் இதயத்தில், நிரந்தரமாக சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தது. அன்னை மரியாளிடமும் இவர் அணைகடந்த பக்திகொண்டிருந்தார், இரவில் பல மணி நேரம் விழித்திருந்து செபிப்பார். பரவசநியான யோகராகவும் இவர் விளங்கினார்.

இவரில் விளங்கிய பிறர் சிநேகம் எல்லையற்றது. ஏழை எளியோர்க்கு உதவுவதும் நோயாளரைச் சிகிச்சை அளித்துப் பராமரிப்பதும் ஒடுக்கப்பட்டோருக்கு ஆறுதலளிப்பதும் சிறைப்பட்டோரைத் தரிசிப்பதும் இவரது முக்கிய அலுவல்கள். நாளொன்றுக்கு சராசரி 160 ஏழைகட்கு உணவளிப்பார். வாரமொன்றுக்கு 25,000 ரூபாவுக்கு மேலாக மதிப்புள்ள உடுபுடவைகள், உணவுப் பொருட்களை அந்தரித்தோருக்கும் அகதிகட்கும் வழங்குவார்.

இவ்வளவு பணம் மாட்டீன் தே போரசுக்கு எங்கிருந்து வருகின்றதென அதிசயப்பட்டவருமுண்டு. இவரது நல் மனதையும், சுயநலமற்ற குணத்தையும், தருமச் செயல்களையும் நன்கறிந்த பல பணக்காரர்களிடமிருந்தே இவருக்கு வாரந் தப்பாது உதவிகள் வந்து குவிந்தன. அவற்றையெல்லாம் யேசுவின் சின்னச் சகோதரரான ஏழைகட்கு, அகதிகட்கு தாராளமாக வழங்கிவிட்டு அவர்களது திருப்தியில் ஆனந்தமடைவார்.

எனவே இவரை ''இரக்கத்தின் சம்மனசு'' என்றும் ''தரித்திரரின் பிதா'' என்றும் மக்கள் அழைத்ததில் வியப்பேதுமில்லை.

குடும்பங்களில் ஏற்படும் பிரச்சனைகட்கு உதவியும் ஆலோசனை அளித்தும், கணவன் மனைவியரிடையே ஏற்படும் மோதல்களைத் தீர்த்துவைத்தும், பகையாளிகளை ஒற்றுமைப்படுத்தியும் சண்டை சச்சரவுகளைச் சமாதானப் படுத்தியும் வந்தமைக்காக இவரை ''சமாதானத்தின் சம்மனசு'' என்றும் அழைத்தனர்.

ஏழைகளான கன்னியர்கள் நல்வாழ்வு பெற, சீதனமும், ஏழை மாணவர்கள் கல்விகற்க பணமும், வசதியற்ற இளைஞர்களின் குருத்துவக்கல்விக்கு நிதியும் வாரி வாரி வழங்கிய வள்ளல் மாட்டீன்

இவரது பிறர்சிநேகத்தின் எல்லை மனித வர்க்கத்தை அன்பு செய்ததோடு நின்றுவிடவில்லை. வயல் வெளிகளில் வாழும் விலங்கினங்கள், வானவீதியில் பறக்கும் பட்சிசாலங்கள். சிறு சிறு பறப்பன, ஊர்வன எல்லாம் இவரது அன்புத் தோழர்களே. ஒரு சிறு புழுவுக்கு முதலாய் துன்பம் தரக்கூடாது என்பது இவரது கொள்கை.

இறைவன் இந்த நீக்ரோ துறவிக்கு பல அரிய வரங்களை அளித்திருந்தார். புதுமை செய்தல், நோயாளரை தொட்டுக் குணமாக்கல், தீர்க்கதரிசனம் கூறுதல் தூரமான இடங்களை நொடிப்பொழுதில் சென்றடைதல், ஓரிடத்திலிருக்க வேறிடங்களிலும் காணப்படுதல், கடினமான சுவர்களையும் ஊடுருவிச் செல்லுதல் என்பன அவ்வரங்களாகும்.

இவரது மறைமாவட்ட ஆயர் மிகக் கடினமான நோயால் வருந்தியபோது குருமுதல்வரின் அழைப்புக்கிணங்க ஆயரின் மாளிகைக்குச் சென்று தொட்டுக் குணமாக்கினார். ஆயினும் ஆயரது ஆடம்பரமான மாளிகையில் சில தினங்கள் தங்குமாறு விடுத்தவேண்டுகோளை நிராகரித்து, மாளிகைக்கு வெளியே ஒரு சாதாரண இல்லத்தில் தங்கி அடுத்த நாளே தமது மடத்துக்கு திரும்பி வந்தார்.

தமது அறுபதாவது வயதில் இவர் இறைவனடி சேர்ந்தபோது பெருநாட்டு மக்கள் பெரு வெள்ளமாக கூடி அவருக்கு அஞ்சலி செலுத்தினர். பெரு நாட்டின் அரச தலைவரும், இரு ஆயர்களும், சில முக்கிய பிரமுகர்களும் அவரது பிரேதப் பேழையை, கூக்குரலிட்டுக் குளறியழுத மக்கள் மத்தியில் நல்லடக்கத்துக்காக சுமந்து சென்றனர்.

ஒரு முறை மடத்தில் எலித்தொல்லை அதிகமானபோது அவற்றைக் கொன்றொழிப்பதற்கு மடத்துத்துறவிகள் தீர்மானித்தனர். இதையறிந்த மாட்டீன் அதனைத் தடுத்து எலிகளனைத்தையும் அழைக்க, அவை ஒன்றன்பின்னொன்றாக வரிசையாக அவர் பின்னே சென்றன. ஒரு பழைய அறையில் அவ்வெலிகளைக் கொண்டுபோய் விட்டு, அறையை விட்டு வெளியேறக் கூடாதெனக் கட்டளையுமிட்டு, அவற்றுக்கு நேரம் தப்பாது உணவளித்து வருவார். ●

---

## இரணவில்லை...

(1 பக்கத் தொடர்ச்சி)

மக்கள் திருச்சிலுவையை ஏந்திய வண்ணம் செபம் செய்வதைக் கண்டு மோட்டார் வண்டியை நிறுத்துமாறு பணித்து ''இந்த மக்கள் எதற்காக இவ்வித செபதபத்தில் ஈடுபடுகிறார்கள்?'' என வினாவினாள்.

அமரிக்க V. O. A நிலையம் தமது காணி பூமிகளை அநியாயமாக அபகரித்தமைக்கு நீதி கேட்டு யேசுவிடம் செபிக்கின்றனர் என்ற பதிலைக் கேட்டதும் அவள் காரில் ஏறிச் சென்று விட்டாள். பின் 1000ல் 592 ஏக்கர் நிலத்தை மக்களுக்குத் திருப்பிக் கொடுக்கச் சம்மதித்தாள்.

இரண்டு வருடங்களில் முடித்திருக்க வேண்டிய V. O. A. திட்டம் இன்று 6 வருடங்களாகியும் முடியவில்லை. அவர்கள் கட்டிய ஒரு கோபுரம் மின்னல் தாக்கி உடைந்து விட்டது. வேறு சில துருப்பிடித்து வளைந்து விழத் தொடங்கி விட்டன. அவர்கள் அங்கு கட்ட இருந்த துறைமுகம், உல்லாசப் பயணிகள் விடுதிகள், நீச்சல் தடாகங்கள், சறுக்கல் விளையாட்டு மைதானம் எல்லாம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு விட்டன. நாகரிகம் என்ற போர்வையில் பெரும் ஆன்மீக சிதைவே ஏற்பட்டிருக்க வேண்டிய களத்தில் பெரு வெள்ளத்துக்கு அணை போட்டாயிற்று.

யேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்குத் தோத்திரம் பண்ணுகிறோம். ஏனெனில் உம் திருச்சிலுவையைக் கொண்டு உலகை மீட்டு இரட்சித்தீர் சுவாமி. ●

# 3 ஆம் மண்டல நாடுகளின் கிறீஸ்தவ வரலாறு

அடுத்த மாதம் ஆரம்பிக்கவிருக்கும் 3ம் மண்டல நாடுகளில் திருச்சபை வரலாற்றுக்கு ஓர் நுழைவு.

இரண்டு கிழமைகளின் முன் நிக்ரகுவா கொண்டுறாஸ் முதலாய மத்திய அமெரிக்க நாடுகளில் மலை மண் சரிவினால் 12,000 மக்கள் உயிர் இழந்ததை கேள்வியுறாதோர் இல்லை, இவர்களின் துன்பக்கண்ணீருடன் நாம் சேர்வது அவசியம். இந் நாடுகளில் கிறிஸ்தவம் விசுவாசம் பரப்பியது எம் மண்ணின் விசுவாச வரலாற்றின் சம காலத்தில் தான். எனவே ஆர்வத்தோடு அவ் வரலாற்றை கற்பது சிறந்தது.

மூன்றாம் மண்டல நாடுகளின் திருச்சபைகளின் வரலாற்றின் 500 வருட நிகழ்வுகளை பல ஆசிய தென் அமெரிக்க சபைகள் கொண்டாடும் இவ்வேளையில் அவற்றின் சிலுவைப்பபுகள் நிறை வரலாற்றினை, பரிசுத்த ஆவியின் ஞானத்துடன் நிதானமாக அணுகுவது நன்று. போர்த்துக்கல், ஸ்பானிய சாம்ராச்சிய எழுச்சியின் தளபதிகள் அல்லது அரசர்களுள் திருச்சபையின் ஐரோப்பிய தலைமைப் பீடம் மறைபரப்பும் நோக்குடன் பாப்பிறை 3ம் இனொசென்தின் "பட்றுவாடோ" ஒப்பந்த வரையறைகளுக்குள், ஏற்பட்ட மதபரவலாக்கத்தின் எழுச்சியலையாகவே, பல விமரிசனக்கண்ணோட்டங்கள், இன்றும் அன்றும் கணிக்கப்பட்டு வரையப்பட்டுள்ளன.

அவ்வல்லரசுகளின் ஆதிக்க வேகமும், பொருளாசையும், படைப்பலமும் எம் திருச்சபை வரலாற்றில ஏற்படுத்திய கறைகளையும், நீங்காத வடுக்களையும் எதிரிகளின் வசைமொழிகளையும் நாம் வரலாற்று ஞாபக வடுக்களாக சுமக்க வேண்டியுள்ளது இருந்தும் இவற்றின் மத்தியில் வல்லடமுள்ள ஆவியின் வல்லமை, புல்லையும் பலமுள்ள கருவியாக செயலாற்றும் கிறீஸ்தவ சமூகங்களை ஆயுதமாகக் கொண்டு யேசுவின் சீடத்துவத்தையும் தாழ்மையுடன் ஊழியம் செய்யும் ஓர் சிறு மந்தையையும் 3ம் மண்டல மண்ணில் வித்திட்டு உருவாக்கியுள்ளது.

இம் மூன்றாம் உலகமண்டல மக்களின் வரலாற்றினை மூன்றாக பிரித்து நோக்கலாம்.

முதலாவது – ஆசிய தென்னமெரிக்க காலனித்துவ காலம் 1500 – 1900
1600 – 1900 ஆபிரிக்க, காலனித்துவ காலம்

இரண்டாவது – அமெரிக்க காலனித்துவமும் தேசிய விடுதலையும் எழுச்சியும் 1900 — 2000

மூன்றாவது — நவீனத்தின் 3ம் மிலேனிய காலமும், வர்த்தக மயமான உலகாக்கமும்.

முதலாம் பகுதியில் தென் அமெரிக்காவில் கிறிஸ்தவ உதயம் பதினாறாம் நூற்றாண்டில் ஆரம்பமாகியது.

இன்றைய மெச்சிக்கோவின் கிழக்குக் கடலோரமாக கிடந்த மேற்கிந்திய தீவுகளிலேயே யேசுக்கிறிஸ்துவின் செய்தி அறிவிப்பு 1511ல் ஆரம்பமாகியது. மெக்சிக்கோவில் 1519 — 1521ல் நற்செய்தி முழக்கம் ஆரம்பித்தது. 1522ல் பிரான்சிஸ்கன் மிஷனரிகளும், பின் சாமிநாதர் டொமினிக்கன்ஸ் சபையினரும் பணியாற்றி 16ம் நூற்றாண்டின் முடிவுக்கு முன்னரே சுதேச மொழி பயின்று அம் மொழிக்கு இலக்கணம் எழுதி, சேவை புரிந்தனர். இக்கால கட்டத்தில் சேவை புரிந்தபிரான்ஸ்கன் மினசரிகள்மட்டும் 86 பேர் 1533 தொடக்கம் பணிபுரிந்த அகுஸ்தீனிய சபையினர் உட்பட, நூற்றாண்டின் நடுப்பகுதியில் மூன்று சபைகளிலும் 200 பணியாளர்சட்கு மேல் சேவையாற்றினர். இவர்கள் ஒன்பது மில்லியனுக்கும் அதிகமான மக்களை யேசு பக்கம் திருப்பினர். இவர்களில் சாமிநாத சபையினர் மண்ணின் மக்கள் பலரையும் தம் துறவற சபையில் இணைத்துக் கொண்டனர்.

1555ல் மெக்சிக்கோவில் முதல் தேசிய மேய்ப்புப் பணி மாநாடு இடம்பெற்றது. 1572ல் யேசு சபையினரும் வரத்தொடங்கினர். ஏறத்தாழ முந்நூறுக்கும் அதிகமான யேசு சபையினர் கல்விப்பணியில் கருத்தாக உழைத்தனர்.

மெக்சிக்கோ யேசுவை முழுமனதாக ஏற்றுக்கொண்டதற்கு முழுமுதற் காரணம், எல்லா அப்போஸ்தலர்களினதும் மிசனரிகளினதும் இராக்கினியான தேவ தாய் மரியாள்தான் 1509ம் ஆண்டு அஸ்டெக் சாம்பிராச்சியத்தின் மகா மன்னன் 2ம் மொான்ரேசுமாவின் சகோதரி இளவரசி பப்பன்ரிசின் கண்ட காட்சியாகும்.

இதைக் கூறுமுன் ஒரு வரலாற்று உண்மையை அறிய வேண்டும்.

அமெரிக்க கண்டத்தை கண்டுபிடித்தது யார்? என்ற வினாவை வகுப்பறையில் ஆசிரியர் எழுப்புவாராயின் மாணவர்கள், கிறிஸ்தோபர் கொலம்பஸ் என விடை பகர்ந்தால் அது சரியான விடையெனக் கூறப்படும். இக் கேள்வியும் அதன் விடையும் பிழையானவையே. அதன் கருத்தாக்கமும் தவறானது என்பது கண்கூடு. அமெரிக்காவுக்கு கடல் பாதை திறக்குமுன்பே மக்கள் அங்கிருந்தார்கள். அவர்களின் உடலமைப்பு இந்தியர்கள்போல் காணப்பட்டதால் செவ்விந்தியர் என அழைக்கப்பட்டனர். தற்போது அமரி இந்தியர்கள் எனக் குறிப்பிடப்படுகிறார்கள்.

இக் கருத்தாக்கம் எமது சிந்தனையில் ஊடுருவி போலியான எண்ணக் கருத்துகளை உருவாக்குகிறது. புதிய உலகம் நோக்கி மக்கள் படையெடுத்தனர். ஆரம்பத்தில் போர்த்துக்கால், ஸ்பானிய நாட்டினரும் பின்னர் வினான்டர்ஸ் எனப்படும் டச்சு மக்களும், ஆங்கிலோ சாக்ஸன் இனக்குழுவைச் சேர்ந்த இங்கிலாந்து நாட்டவரும், ஸ்கொட்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, அயர்லாந்து, இத்தாலி நாட்டினரும் சென்றனர். ஐரோப்பிய கண்டத்திலேற்பட்ட அரசியல் மாற்றங்களுக்கு ஏற்ப காலனித்துவ நாடுகளிலும் ஏற்ற இறக்கங்கள் உருவாயின.

---

## விரத செபம்

இம் மாதம் 13ம் ஆம் திகதியும் வரும் மாதங்களில் 13 ஆம் திகதிகளிலும் வன்னி மக்களுக்காகவும் சமாதானத்திற்காகவும் வேண்டி மாலை 3.00 — 5.00 மணிவரை வளன் ஆச்சிரமத்தில் நற்கருணை நாதர் முன் மௌன விரதமும் செபமாலையும் நடைபெறும்.

---



---

Print : "Annai printers", Jaffna
Published by PAX CHRISTI.
St JOSEPH'S ASHRAM,
101, Main Street, Jaffna